# Humanism in Thangarbachan's Novel "Onpathu Rupai Nottu"

**Dr. R. Usharani**
*Assistant Professor, Department of Tamil*
*Sona College of Arts and Science, Salem*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255561

**Abstract**
*Humanity is something that allows people to live in this world with well-being, peace and without suffering. Humanity is the basis for a person to live as a human being. The word humanity is meaningful. As a development of the word humanity, humanity, human love, human affection, human nature can be mentioned. This is called humanity today. Humanity is the qualities such as love, kindness, friendship and compassion that a person shows towards others and other living beings. It is revealed only when it is understood mentally. This quality is needed for world unity and peace. A person with a mind becomes a human being. The quality and thought of loving others makes a human being. In Thangar Bachchan's novel Nine Rupees Note, various impressions about humanity and humanity can be found. In this way, the purpose of this article is to study humanity.*
***Keywords:*** *Humanism, Thangarbachan, Compassion, Affection, Attachment, Kindness, Sympathy*

**References**
1. Arunachalam P., Third Edition & June 2000, Manitha Neyam, Published New Century Book House, Chennai.
2. Kamali Sri Paal, Second Edition &1988, Manitha Neyam, Published New Century Book House, Chennai.
3. Thankarpatchan, Forth Edition & December & 2007. Onpathu Rupaai Nottu, Annam (p) lit, Thanjavur & 613 007

# தங்கர் பச்சானின் ஒன்பது ரூபாய் நோட்டு நாவலில் – மனிதநேயம்

***முனைவர் இரா. உஷாராணி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்

***ஆய்வுச்சுருக்கம்***
*மக்கள் நலமுடனும் அமைதியுடனும் துன்பமின்றியும் இவ்வுலகில் வாழ வழிவகை செய்யும் ஒன்று தான் மனிதநேயம். மனிதநேயமே மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அடிப்படையாகிறது. மனிதநேயம் என்ற சொல் பொருளாழமிக்கது. மனிதநேயம் என்ற சொல்லின் வளர்ச்சியாக மானிடம், மனிதப் பற்று, மனிதாபிமானம், மனித நாட்டம், மனிதத் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதனை இன்று மனிதம் என்ற சொல்லால் அழைக்கின்றனர். பிறரிடன் மற்றும் பிற உயிர்கள் மீது மனிதன் காட்டும் அன்பு, கருணை, நட்பு, இரக்கம் போன்ற பண்புகளே மனிதநேயமாகும். மனதளவில் புரிந்து கொள்ளும் போது தான் வெளிப்படும். உலக ஒற்றுமைக்கும் அமைதிக்கும் இப்பண்பு தேவை. மனம் உடையவன் மனிதனாகிறான். பிறரை நேசிக்கும் பண்பும் எண்ணமும் மனிதனாக்குகின்றது. தங்கர் பச்சானின் ஒன்பது ரூபாய் நோட்டு நாவலில் மனிதம், மனிதநேயம் குறித்தப் பல்வேறு பதிவுகளைக் காண முடிகிறது. அவ்வகையில் மனிதநேயம் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறவுச்சொற்கள்:*** *மனிதநேயம், தங்கர்பச்சான், மனிதாபிமானம், அன்பு, பாசம், கருணை, இரக்கம்*

## முன்னுரை

இலக்கியம் என்பது சமுதாயத்தின் விலைமதிப்பற்ற செல்வம். சமுதாயக் கருத்துகளைக் கூறும் இலக்கியங்களே நாளடைவில் மக்களிடம்; நன்மதிப்பைப் பெறுகின்றன. இலக்கிய வகைகளில் நாவல் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. இன்றைய படைப்பாளர்கள் நாவல் மூலம் சமுதாயக் கருத்துகளையும்; சிக்கல்களையும் தீர்வுகளையும் கூறுகின்றனர். அவ்வகையில் தங்கர் பச்சானின் ஒன்பது ரூபாய் நோட்டு நாவலில் காணப்படும் மனிநேயப் பண்பை எடுத்து உரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறிமுகமில்லாதவரின் உதவி

மனிதநேயம் என்பது முகம் தெரியாதவர்களுக்கும் அன்பு, கருணை, உதவி, பாசம் காட்டும் போது உச்சம் பெறுகிறது. மாதவரின் மகன்கள் சொத்துக்கு ஆசைப்பட்டு தகாத வார்த்தைகளால் மனதைக் காயப்படுத்துகின்றனர். அதனால் மனமுடைந்த மாதவர் தனது மனைவி வேலாயுடன் வீட்டைவிட்டு வெளியேறுகிறார். அச்சமயம் வேலாயி உடல்நிலை சரியில்லாமல் இருக்கின்றாள். தன் கணவனின் முடிவே தனது முடிவாகும் என்று எண்ணி அந்நிலையிலும் வீட்டைவிட்டு வருகிறாள். பலதூரம் கடந்து தார் சாலையை அடைகின்றனர். நடு இரவு அச்சமயம் வேலாயி சாலையில் முடியாமல் படுத்து விடுகிறாள். அப்போது அந்தப் பக்கமாக ஒரு நான்கு சக்கர வாகனம் வருகிறது. சாலையில் வேலாயிபடுத்துக்கிடப்பதைப் பார்த்து வண்டியை நிறுத்தி அவர்களை நகரப் பகுதிக்குக் கொண்டு போய்விடும் மனிதநேயப் பண்பை,

> **“கண்ணுக்குத் தெரிகிற தூரத்தில் ராந்தல் வெளிச்சம் ஒன்று தெரிந்துது தார்பாய் கட்டி சாவகரமாய் டயர்வண்டி வந்து கொண்டிருந்தது. உள்ளே ஏதேதோ**

***மூட்டைகள். வண்டி ஓட்டு பவரைத் தவிர வேறுயாருமில்லை வண்டியை நிறுத்தினார். ரோட்டில் ஒரு உயிர்படுத்துக் கிடப்பதைப் பார்த்ததும் வண்டிக்காரர் இறங்கி வந்தார். வேலாயிக்கு உடம்பு சரியில்லாததைச் செ ால்லி வண்டியில் ஏற்றிக் கொள்ள அனுமதி கேட்டார்." பண்ருட்டி கிடங்குக்குப் போறேன் வேணும்னா அதுவரிக்கும் ஏறிக்கிங்க என்றார் அவரும் ஒரு கை கொடுத்து வேலாயியைத் தூக்கிப் பிடித்தார். (தங்கர்பச்சான், ஒன்பது ரூபாய் நோட்டு, ப.75)***

இதனையே,

**"எல்லா மனிதர்களிடத்தும் மனிதநேயம் என்பது மனத்தின் ஓரத்தில் இருந்து கொண்டே தான் இருக்கிறது. அது வெளிப்படும் இடமும் வெளிப்படுத்தும் விதமும் வெவ்வேறாக இருக்கும்".**

***(கமலி ஸ்ரீ பால், மனிதநேயம், ப.72)***

என்று கமலி ஸ்ரீ பால் அவர்கள் குறிப்பிடுகின்றார். இதன் வழி, உடம்பு சரியில்லாமல் தவித்தவருக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்த ஒருவனின் மனிதநேயத்தை அறியமுடிகிறது.

### ஹாஜாபாயின் மனிதநேயம்

ஹாஜாபாய் மாதவரின் நண்பர். இந்து -முஸ்லீம் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்கள். ஹாஜா பாய் துன்பப்படும் போது தொழில் தொடங்கமாதவர் உதவியதால், அவர் வாழ்வில் நல்ல முன்னேற்றம் அடைந்தார். ஆம்பூரில் அரிசி ஆலை தொடங்கி நன்றாக வாழ்ந்து வந்தார். மாதவருக்கு மகன்களால் ஏற்பட்ட மனஉளைச்சல் காரணமாக வீட்டை விட்டு வெளியேறி ஹாஜாபாயைச் சந்திக்கிறார். ஹாஜாபாயும் நன்றி மறவாது அவரை வரவேற்று தன்னுடனே வைத்துப் பார்த்துக் கொள்கிறார். ஹாஜாபாய் ஆட்டுக்கிடை போட்டு ஆடுகள் வாங்கி விற்கும் மறுதொழிலை தொடங்குகிறார். அதனை மாதவரும் அவரது மனைவியும், பாய் வேண்டாம் என்று தடுத்தும் அங்கேயே தங்கி பார்த்துக் கொள்கின்றனர். அவ்வாறு இருந்து வரும் நாளில் ஒரு நாள் வேலாயியைப் பாம்பு தீண்டிவிடுகிறது. காப்பாற்ற பாய் தனது காரில் கூட்டிச் செல்கிறார். வேலாயி உயிருக்குப் போரடிக் கொண்டிருக்கிறாள். முதலில் அருகில் இருக்கும் வைத்தியரைப் பார்த்த போது மருத்துவம் பல செய்கிறார் பயனில்லை. அங்கிருந்து மருந்துவமனைக்கு அழைத்துச் செல்கின்றனர். அப்போது பாய் அவள் உயிர்காப்பாற்றப்பட வேண்டும் என்று புலம்பும் நிலையை,

**"இந்த உலகத்தில் தன்னை மட்டுமே நம்பிவந்து தனக்காகவே உழைத்த இவர்களுக்கு ஆண்டவனின் கருணை இவ்வளவு தானா? வீட்டில் தங்கியிருந்தால் இப்படி ஆகியிருக்குமா மாதவரின் பிள்ளைகளுக்குத் தெரிந்து கேட்டால் என்ன பதிலைச் சொல்லப் போகிறோம்? காரின் வேகத்தைவிட பாயின் சிந்தனை வேகமாக ஓடியது"**

***(தங்கர்பச்சான், ஒன்பது ரூபாய் நோட்டு, ப.97)***

என்ற கருத்தின் வழி அறிய முடிகிறது. இதன் வழி தனக்காக வந்த உயிருக்கு ஆபத்து வந்ததை எண்ணி வருந்தும் பாயின் மனிதநேய மாண்பை அறியமுடிகிறது.

### இரயில் பயணத்தில் மனிதநேயம்

வீட்டைவிட்டு வெளியேறிய மாதவர் ஹாஜாபாய் வசிக்கும் ஆம்பூருக்குச் செல்லரயில் நிலையம் சென்று சேர்ந்தார். எந்தரயில் என்று தெரியாமல் மாதவர் அருகில் இருந்த வரைக்கேட்டு விட்டு ரயிலில் ஏறினார். அப்போது தான் மாதவர் யோசித்தார் பணம் இல்லாமல் வந்ததை, வருவதை எதிர் கொள்வோம் என்று ரயிலில் மாதவரும் வேலாயியும் ஏறி சென்னை சென்று கொண்டிருந்தனர். அப்போது அருகில் ஒரு

முஸ்லீம் பாய் அமர்ந்திருந்தார். அவரிடம் தான் செல்லும் ஊர் பற்றியும் கேட்ட போது இந்த ரயில் அங்கு போகாது என்று கூறினார். மாதவருக்குப்பயம்கூடியது. அப்புறம் அந்த பாய் அவர்களிடம் விசாரித்து தான் அந்தப் பக்கம் செல்வதாகவும் வாணியம்பாடியில் உங்களை விடுகிறேன் என்றும் அங்கே விசாரித்தீர்கள் என்றால் எளிதாகக் கண்டுபிடித்து விடலாம் என்றும் கூறி ஆறுதல் தருகிறார்.

***"அவுருங்க ஆடுவாங்கிக்கினுப் போவாரு அப்பறம் ஆட்டுத்தோலு கூட நெறைய்ய வாங்கிக்கினு போவாரு. அவரு அண்ணங்கூட இங்க நெல்லிக்குப் பத்துல மளிகைக் கடைவச்சிருக்கார். இப்படி மாதவர் விவரமாய்ச் சொல்லிக்கூட பாயால் அடையாளங் கண்டுபிடிக்க முடியவில்லை. பாய்க்கு தன்னால் இவர்களுக்கு உதவ முடியவில்லையே என வருத்தம், வேணுமிண்ணா எங்க கூடவே வாணியம் பாடிவரைக்கும் வாங்க அங்கேருந்து ஆம்பூருக்கு பக்கத் தான். அங்க எறங்கி இந்த வெவரத்தச் சொன்னீங்கண்ணா ரசியா கண்டு பிடிச்சுடலாம் மாதவர் தான் ஆம்பூருக்கே போய் ஹாஜாபாயை நேரில் பார்த்து விட்டதாகவே நினைத்துக் கொண்டார்" (தங்கர்பச்சான், ஒன்பது ரூபாய் நோட்டு, ப.80)***

என்ற கருத்து வழித்தெரியாமல் தடுமாறுவர்களுக்கு அவர்களின் நிலையை அறிந்து உதவமுன் வரும் ஒருவன் மனிதநேயச் சிறப்பையும், இந்து முஸ்லீம் ஒற்றுமையையும் அறிய முடிகிறது.

பயணத்தை அந்தப் பாயுடன் மாதவரும் வேலாயும் தொடர்ந்தனர். சென்னை சென்றனர். அங்கிருந்து வாணியம்பாடி செல்ல பயணச்சீட்டு எடுக்கப் பாய் பயணச்சீட்டு வழங்குமிடத்திற்குச் செல்கிறார். அப்போது மாதவர் அவரைத் தடுத்து தன்னிடத்தில் பணம் இல்லாததையும், மனைவியின் காதில் இருக்கும் கம்மலை விற்றுக் கொள்ளுமாறும் அவகாசம் கூறுகிறார். ஆனால் பாய் அதனை மறுத்து பயணச்சீட்டை எடுத்துப் பத்திரமாக ஆம்பூரில் இறக்கி விட்டு செலவுக்குப் பணமும் கொடுத்துதவும் பாயின் நேசத்தை,

**"மனுஷனுக்கு மனுஷன் செய்யற உதவியாத் தான் நான் இதசெய்யுறேன். நான் மட்டும் இதே நெலமையில இப்படியே இருப்பேண்ணு சொல்லிட முடியாது. எனக்கு உங்கள் மாதிரி ஒரு நெலம வரும் போது என்னை மாதிரியாரோ ஒருத்தர் ஒத விடப்போராங்க. போயிசேர்ற வரைக்கும் பணத்தப் பத்தி எதுவும் பேசாதீங்க".** ***(தங்கர் பச்சான், ஒன்பது ரூபாய் நோட்டு, ப.87)***

என்ற கருத்தும்,

"ரயில் ஆம்பூரை நெருங்கிக் கொண்டிருந்தது. பாய்மாதவரை எழுப்பித் தனியாகக் கூப்பிட்டுப் போனார். ரயில்வே ஸ்டேஷன் ஒட்டிபின் பக்கமாக உரக்கடை ஒன்று இருக்கும். அங்கே போய் ஹாஜா பாயின் விவரத்தைச் சொன்னால் கண்டுபிடித்து அனுப்பி வைப்பார்கள், நான் அனுப்பியதாகச் சொல்லுங்கள் என்று அந்த முகவரியையும் ஒரு துண்டு பேப்பரில் எழுதிக் கொடுத்தார். இவ்வளவு தூரம் வந்து இவரையும் பிரியப் போகிறோம். ஹாஜாசாயுபுவைக் கண்டுபிடிக்க வேண்டுமே என்கிற கவலை வேறு கலங்கியிருந்த மாதவரை பாய் சமாதானப்படுத்தி

**"கண்டுபுடிக்கிறது ஒண்ணும் கஷ்டமே இல்ல, இன்னும் கால் மணிநேரத்தில ஆம்பூருப் போயிடுவிங்க" என்று சொல்லி இரண்டு பேருக்கான டிக்கட்டையும் செலவுக்குப் பத்துரூபாய் பணத்தையும் கொடுத்தார்"** ***(தங்கர்பச்சான், ஒன்பது ரூபாய் நோட்டு, ப.87)***

என்ற கருத்தும் குறிப்பிட்டுள்ளது. இதனையே, மனிதாபிமானம் என்பது துன்பத்தில் உழலும் மக்கள் மீது வெறுமனே கருணை காட்டுவதோ, அவர்களுக்காகப்

பிரிந்துரைப்பதோ. ஒப்பாரி வைப்பதோ அல்ல, பிரச்சனைகளையும், துன்பங்களையும் நீக்குவதற்காக ஒப்பற்ற கற்றல் அம்மக்களிடம் உண்டு என்ற அசையாத தன்னம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்குப் பல வழிகளையும் காட்டவேண்டும். (பா.அருணாச்சலம், மனித நேயம், ப. 20)

என்று ப. அருணாச்சலம் அவர்கள் குறிப்பிடுகின்றார். யாரென்று தெரியாமல் அறிமுகம் இல்லாதவர்களுக்கு உதவி செய்து அவர்கள் செல்ல வேண்டிய இடம் வரைக்கும் துணையாக வந்து அவர்களின் துன்பத்தைப் போக்கிய மனிதநேயத்தின் மாண்பை அறிய முடிகிறது.

**மனிதநேய மற்றத்தன்மை**

ஹாஜாபாய், கமீலா, வேலாயி என்று அனைவரும் இறந்து விடமாதவர் தனிமையில் விடப்படுகிறார். தனிமையில் இருந்தமாதவர், இனியும் பிடிவாதம் ஆகாது என்று எட்டு வருடம் கழித்து மகன்களையும், மகள்களையும் பார்க்க புலியூர் திரும்புகிறார். பேருந்தில் ஏறிய மாதவரிடம் போதிய அளவு பயணச்சீட்டு வாங்க பணம் இல்லை. மாதவர் நடத்து னரிடம் பலவாறு கெஞ்சியும் இரக்கம் கொள்ளாது நடந்து கொள்கிறார். இதனை,

> **“தம்பீ அவசரப்படாத சொல்றதக் கொஞ்சம் கேளு நான் புலியூர் தான் போவனும் கடலூர் வரிக்கும் போனா அங்கேருந்து எப்படியாவது போயிக்கிறேன்”**

என்று சொல்லிக் கொண்டே மடியை அவிழ்த்து பன்னிரண்டு ரூவாய் சில்லறையையும் கொடுத்து, ஒரு டிக்கட் கொடு, நான் ஊருக்குப் போய் மீதிக் காசிய எப்படியாவது வாங்கிக் குடுத்துடறேன் என்றார்”

> **“பெரியவரே நேரத்த வீணாக்காத சீக்கிரம் எறங்கி வேற எதிலியாவது போயிடு என்று எச்சரிக்கை பாணியில் கண்டக்டர் சொன்னதும் இனிமேல் இங்கு நிற்பது வீணான வேலை என முடிவெடுத்து யார்முகத்தையும் பார்க்காமல் பஸ்ஸிலிருந்து இறங்கி அந்த இடத்தைத் தாண்டினார்.” (தங்கர் பச்சான், ஒன்பது ரூபாய் நோட்டு, பக்.146-147)**

என்ற கருத்தானது வயதானவர் கெஞ்சிக் கேட்கிறார் என்று கூடப் பராமல் மனிதாபிமானம் சிறிதும் இன்றி பேருந்தை விட்டு இறங்க வைத்த நடத்துனரின் அவலச் செயலைப் பதிவு செய்து இது போன்ற மனிதநேய மற்ற செயலில் ஈடுபடக் கூடாது என்பதை மறைமுகமாகப் படைப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**அஃறிணை உயிர்களின் மீது கொண்ட அன்பு**

ஹாஜாபாயின் ஆட்டுக்கிடையைப் பார்த்தக் கொண்ட மாதவர் தன் மனைவி இறந்த பின்பும் அத்தொழிலைச் அங்கேயே இருந்து செய்தார். தமீலாவின் கணவன் ஹாஜாபாய் இறந்த பின்பும் கமீலா அத்தொழிலை விட்டு விடலாம் என்று கூறியும் கேட்காது தொடர்ந்து செய்தார். ஒருமுறை கூத்துப் பார்த்து விட்டு வந்து கண்ணயர்ந்து தூங்கி ஆட்டுகிடையை விட்டு வெளியெறி பக்கத்து வயல்களில் உள்ள கிழங்குகளை வயிறு நிரம்பத்தின்று விடுகிறது. கண்விழித்து ஆடுகளைக் காணாது தேடி அலைகிறார் மாதவர், பின்பு கண்டறிந்து ஆடுகளை உற்றுநோக்குகிறார். ஆடுகள் செரிமானம் ஆகாமல் துன்பப்படுகிறது. தனக்குத் தெரிந்த கை வைத்தியம் எல்லாம் செய்து பார்க்கிறார் செரிமானம் நிகழவில்லை. ஆடுகள் ஒவ்வொன்றாக வயிறு வீங்கி இறந்துபடுகிறது. அதனைக் கண்ட மாதவர் மிகவும் வருந்தி தன்னைத் தானே நொந்து கொள்கிறார். ஆடுகள் வீழ்வதைப் பார்க்க முடியாது துன்பப் பட்டமாதவரின் நேயத்தை,

***“கிடையில் போய் ஆடுகளைப் பார்த்ததும் இன்னும் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. கிடை முழுசும் நடக்க இடமில்லாமல் வயிறு வீங்கிப் போய் ஆடுகள் கிடந்தன. இனி மேலும் இங்கு நின்று இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிற அளவுக்கு மனசில் தைரியமில்லை”***

***(தங்கர் பச்சான் ஒன்பது ரூபாய் நோட்டு ப.119)***

*என்ற கருத்தின் வழி அறியமுடிகிறது. அஃறிணை உயிர் மீது அன்பு காட்டிய மாதவரின் மனிதநேயத்தை இப்பகுதி உணர்வுபட உணர்த்தியுள்ளது.*

***முடிவுரை***

*துன்பத்தில் இருப்பவர்களின் துயரைப் போக்கும் மனிதநேயம் இச்சமூகத்தில் தழைத் தோங்க வேண்டும். இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதரும் பிற உயிர் கள்மீதுஅன்பு, பாசம், கருணை, இரக்கம் போன்றவற்றைக் காட்டும் நேயப்பண்புடையவர்களாக இருக்க வேண்டும் என்ற மனிதநேயப் பண்பை அறிய முடிகிறது. செல்ல வேண்டிய ஊருக்கு வழி தெரியாமல் அறியாமையால் ஒருவர் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் போது, அவர்களின் பயத்தைப் போக்கி, அவர்கள் செல்ல வேண்டிய ஊர் வரை கூடவே விட்டுச் செல்லும் ஒருவரின்மனிதநேயப் பண்பை அறிய முடிகிறது. சக மனிதர்கள் மீது மட்டுமல்லாது அஃறிணை உயிர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்ற மனிதநேயப் பண்பை அறிய முடிகிறது.*

***துணைநூற்பட்டியல்***

*1. அருணாச்சலம். பா, மூன்றாம் பதிப்பு - ஜூன் 2000, மனிதநேயம், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-600 098,*
*2. கமலிஸ்ரீபால், இரண்டாம் பதிப்பு - 1988, மனிதநேயம், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-600 098,*
*3. தங்கர் பச்சான், நான்காம் பதிப்பு - டிசம்பர் 2007. ஒன்பது ரூபாய் நோட்டு அன்னம் (பி) லிட் தஞ்சாவூர் - 613 007*